

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.11.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சந்தித்து, 23.11.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ள ”கலைஞர் 100 வினாடி வினா இறுதிப்போட்டி–க்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.11.2024) முகாம் அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது கணவர் ராஜா, மகள் நட்சத்திரா ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.11.2024) கத்தாரில் கடந்த நவம்பர் 15 மற்றும் 16 தேதிகளில் நடைபெற்ற மோட்டார் பந்தயப் போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டு வீரர் ஜெஃப்ரி இம்மானுவேலைப் பாராட்டி, வாழ்த்து தெரிவித்ததுடன், போட்டியில் கலந்து கொண்டதற்கான செலவினத்தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து (TNCF) வழங்கினார். இந்நிகழ்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிளிங் கூட்டமைப்பு ஒன்றிணைந்து நடத்திய 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிளிங் வீராங்கனைகள் நேற்று முன்தினம் (20.11.2024) சந்தித்து பாராட்டும். வாழ்த்தும் பெற்றனர். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.11.2024) தலைமைச் செயலகத்தில், அரசு பணியில் விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3% பணி வழங்குவது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் - ஒப்பந்த அடிப்படையில்

# பணியமர்த்த விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள்!

## வலைதளத்தில் வெளியீடு!

சென்னை, நவ. 22 -

தமிழ்நாடு அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெருமளவில் இந்திய பணியாளர்களை குறிப்பாக தமிழக பணியாளர்களை 1978ம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தி வருகிறது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை மேலும் விரிவாக்கும் பொருட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தேவைப்படும் மனித வளத்தினை இந்நிறுவனத்திற்கு பெற்றுத் தருவதற்கு வெளிநாட்டில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கான நடைமுறைகள் அறிந்த ஆலோசகர்கள்/ ஆலோசனை முகவர்கள் (Consultant/ Consultant Agencies) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி உள்ளது.

ஆலோசகர்கள்/ஆலோசனை முகவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள் www.omcmanpower.tn.gov.in என்ற இந்நிறுவன வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, உரிய தகுதி மற்றும் அனுபவம் உள்ள ஆலோசகர்கள் /ஆலோசனை முகவர்கள் (Consultant/Consultant Agencies) இந்நிறுவன வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து 31.12.2024 தேதிக்குள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) எண்.42. ஆலந்தூர் சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி, சென்னை 600032 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



மதுரை – பொள்ளாச்சி தேசிய நெடுஞ்சாலைப் பகுதி, ஒட்டன்சத்திரம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள காளாஞ்சிபட்டியில், இணைப்புச் சாலை அமைப்பதற்கு அமைச்சர் அர. சக்கரபாணி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் பூங்கொடி, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 22/11/2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாலக்கோடு | பி.எம்.குப்புசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், பெரியாம்பட்டி, தருமபுரி. |
| | மதியம் 2.30 மணி | | அரூர் | கொங்கு வேளாளர் திருமண மண்டபம், அரூர், தருமபுரி. |
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### மாவட்ட அமைப்பாளர் ஆர்.சிவகுரு முன்னிலை!

# தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில்!

தருமபுரி, நவ. 22 -

தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டம் மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.

தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மாவட்ட கழக முகாம் அலுவலகத்தில் திமுக இளைஞர் அணி கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில், தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நவ.27 அன்று தமிழ்நாடு துணை முதல்வர் இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

டிச.5,6,ல் தருமபுரி மாவட்டத்திற்கு வருகைபுரியும் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு வழங்குவது.

வாக்குசாவடி அளவில் இளைஞர் அணிக்கு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு சமூக வலைதள பயிற்சி கூட்டம் நடத்துவது. இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கையை அதிகமாக சேர்ப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.என்.சி. மகேஷ்குமார், தீ. கோடீஸ்வரன், தங்கசெழியன், பி.டி.ஹரிபிரசாத், ஏ. நாசர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.